வேண்டுமென்பதற்காக இந்தப் பகுதியில் 500 கைத்தறிகளை 1,000 விசைத் தறிகளாக மாற்றும் திட்டம் ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு 2000 கைத்தறிகளை 5,000 விசைத் தறிகளாக மாற்றும் திட்டம் உள்ளது. அதில் பரிசீலிக்கலாமா என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70. திரு. எம். தங்கவேல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

70—

திருச்சி—துறையூர் சாலையை அகலப்படுத்துதல்.

*9711—திரு. எம். தங்கவேல்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி--துறையூர் சாலையை அகலப்பாதையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

முற்பகல் 10—10

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். திருச்சியிலிருந்து துறையூர் செல்லுகிற வழியில் 15 கிலோ மீட்டர் தொலைவில் மணச்சநல்லூர் உள்ளது. அந்த மணச்சநல்லூர் சாலை அகல சாலையாக உள்ளது. மணச்சநல்லூரிலிருந்து துறையூர் வரை 20 கிலோ மீட்டர் தூரம் குறுகிய சாலையாக இருக்கிற காரணத்தாலே பஸ் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. அதை மாற்றி அகலப்பாதையாக வரும் ஆண்டிலாவது சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணச்சநல்லூரிலிருந்து துறையூர் வரை ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் அந்த சாலை இருக்கிறது. ஏற்கனவே ஒரு வழி சாலையாக இருக்கிற

சாலைகளை எல்லாம்—நான் நேற்றைக்கேகூட சட்டமன்றத்திலே தெரிவித்து இருக்கிறேன். முதலிலே ஒரு வழி சாலைகளையெல்லாம் பழுது பார்க்கிற பணிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சி காலத்திலே மிகத் தீவிரமாக செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே முதற்கட்ட பணிகள் முடிவு அடைந்ததற்குப்பின்னாலே தான், இரண்டு வழி சாலைகளாக மாற்றுகிற பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். இதற்கு ஏறக்குறைய 1 கோடி ரூபாய் மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. அந்த அளவிலே நிதி ஆதாரங்கள் இந்த ஆண்டு இல்லாத காரணத்தினாலே முதலிலே ஒரு வழி சாலைகளை சீர்படுத்திவிட்டு அதற்கு பின்னாலே இரு வழிச் சாலைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திரு. தா. செழியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

71—

திருவாளந்துறை வெள்ளாற்றில் பாலம்.

*9733—திரு. தா. செழியன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடைப்பளிப்பாரா:

பெரம்பலூர் வட்டம், திருவாளந்துறை வெள்ளாற்றில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த திருவாளந்துறை வெள்ளாற்று பாலம் கட்டினால் திருச்சி தென்னாற்காடு மாவட்டங்களில் 30 கிராம விவசாயிகள் பயன் அடைவார்கள். இரு மாவட்ட மக்களும் வியாபாரத்தை பெருக்குகின்ற அளவுக்கு அது வசதியாக இருக்கும். எனவே அடுத்த நிதியாண்டிலாவது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்தப் பாலம் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆற்று வழி நீர்ப் பாதை சுமார் 100 மீட்டருக்கு கட்டப்பட வேண்டும். இதன் மதிப்பீடு

TRUTH ALONE TRIUMPHS